நாள். 10.09.2024

DVC.No. 03/2022

ம.சா.1

திருமதி . தீபிகா

க/பெ. அருள்

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

1.எதிர்மனுதாரர் எனது கணவர் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் விவாகரத்து கேட்டு வழக்கு தாக்கல் செய்ததால் நான் அவர் மீது இந்த வழக்கை ஜீவனாம்சம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது பெற்றோர்கள் உயிருடன் உள்ளார்கள். எனதுதாயார் இல்லத்தரசியாக இருக்கிறார். எனது அப்பா விவசாயம் செய்து வருகிறார். எனது அப்பாவிற்கு 1 1/2 ஏக்கர் நிலம் உள்ளது. என்னுடன் பிறந்தவர்கள் 2 பேர். ஒரு அக்கா, ஒரு தம்பி. எனது அக்காவிற்கு திருமணம் முடிந்துவிட்டது. எனது தம்பி படித்துக்கொண்டிருக்கிறார்.

2. நான் 12 ம் வகுப்பு படித்து முடித்து college BA litrature முதலமாண்டு படித்துக்கொண்டிருந்தபோது திருமணம் நடந்தது. எனது கணவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க கல்லூரி படிப்பதை நிறுத்திவிட்டேன். எனது கணவர் Engineering முடித்துள்ளார். எனது கணவரின் ஊர் பெரியவடகம்பட்டி, சேலம் ஆகும். எனது ஊர் மன்னேரி சஞ்சீவபுரம், பென்னாகரம் என்றால் சரிதான். இரு ஊர்களுக்குமிடையே சுமார் 70 கிலோமீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான்.

3. எங்கள் இருவருக்கும் பெரியவர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம் நடந்தது. எனது தாய்மாமாவின் மனைவியின் தம்பியின் திருமணத்திற்கு பொம்பிடிக்கு நானும், எனது பெற்றோரும் சென்றிருந்தோம். அந்த சமயத்தில் எதிர்மனுதாரரின் சகோதரி திருமணத்திற்கு வந்திருந்தார். எதிரிம்னுதாரின் அக்காவும், அவரது கணவரும் முதலில் வந்து எனது பெற்றோர்களிடம் வந்து பெண் கேட்டார்கள். திருமணம் நடந்த சமயத்தில் 2-3 முறை கேட்டார்கள். அதற்கு பின்னிட்டு வீட்டிலும் வந்து கேட்டார்கள். அதன் பின்னிட்டு தான் திருமணம் நடந்தது.

4. திருமணத்தின்போது என்னுடைய விருப்பத்தையும் பெற்றோர்கள் கேட்டு திருமணம் செய்து வைத்தார்கள். எங்கள் இருவரின் முழு சம்மதத்துடன் தான்

திருமணம் நடந்தது என்றால் சரிதான். எனது அக்கா காதல் திருமணம் செய்துக்கொண்டார் . அதனால் நகை உள்ளிட்ட எந்த சீர்வரிசையும் செய்யவில்லை. <u>திருமணத்திற்கு முன்பாக</u> நகை, சீர்வரிசை சாமான்கள், கார் உள்ளிட்டவற்றை எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் கேட்டார்களா? என்றால் இல்லை. எனக்கு திருமணத்தின் போது 20 பவுன் நகை போட்டனர். அவை முறையே வளையல் 4 பவின், மாட்டல் 2 பவுன், 3பவுன் செயின், 5 பவுன் ஆரம், கம்மல் 2 பவுன், 2 பவுன் டாலர் செயின், 4 மோதிரம் தலா 1/4 பவுன் போட்டார்கள். மேற்படி நகையை தவிர வேறு சீர்வரிச்சை எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான்.

5. வன்னியர் சமூகத்தில் திருமண செலவுகளை மணமகன் வீட்டார் தான் ஏற்றுக்கொள்வர் என்றால் சரிதான். சாட்சி பின்னிட்டு இருவீட்டார் சேர்ந்து செலவீனங்கள் செய்ததாக மாற்றி கூறுகிறார். திருமணத்தின்போதோ திருமணத்திற்கு பின்போ சீர்வரிசை செலவுகள் குறித்து எதுவும் தெரியாது . பிரச்சனைக்கு பின்னிட்டு தான் தெரியும். திருமணம் முடிந்ததற்கு பின்னிட்டு எனது பெற்றோர் வீட்டில் ஒரு வாரம் இருந்தோம். அதன் பின்னிட்டு எதிர்மனுதாரர் ஊரான பெரியவடகம்பட்டிக்கு சென்றுவிட்டோம்.

6. எதிர்மனுதாரர் வீடு ஓட்டு வீடாகும். எதிர்மனுதாரருடன் உடன் பிறந்தவர்கள் 2 தங்கைகள். எனது திருமணத்திற்கு முன்பாக எதிர்மனுதாரர் தங்கைகளுக்கு திருமணம் முடிந்துவிட்டது என்றால் சரிதான். எதிர்மனுதாரரும், அவரது பெற்றோரும், நானும் மட்டுமே மேற்படி வீட்டில் வசித்தோம் என்றால் சரிதான். எதிர்மனுதாரரின் ஒரு தங்கை சென்னையில் இருக்கிறார். மற்றொரு தங்கையை எனது மாமியாரின் தம்பிக் திருமணம் செய்து கொடுத்துள்ளார்கள். எனது மாமியாரின் தம்பி பொம்மிடியில் வசிக்கிறார்.

7. எனது கணவருக்கு சொந்தமான நிலம் பற்றி என்னால் குறிப்பாக சொல்லமுடியாது என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு பெரியவடகம்பட்டியில் ஒரு மாதம் நன்றாகதான் வாழ்ந்தோம். முதலில் சிறு சிறு பிரச்சனையாகத்தான் ஏற்பட்டது. பொம்மிடியில் உள்ள நாத்தனார் வீட்டிற்கு சென்றபோது தான் அங்குள்ள குழந்தைகளுடன் விளையாடிக்கொண்டிருந்தபோது தான் பிரச்சனை ஏற்பட்டது. திருமணத்தின்போது என்னிடம் போன் இல்லை என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்னிட்டு எனது கணவர் போன் வாங்கி கொடுத்தார் என்றால் சரிதான். எனது

பெற்றோருடன் நான் பேசவேண்டும் என்று கூறியதற்கிணங்க வர்ப்புறுத்தலின் பேரில் வாங்கிக்கொடுத்தார் என்றால் விருப்பப்பட்டு வாங்கி கொடுத்தார் . எதிர்மனுதாரர் போன் வாங்கி கொடுத்ததற்கு பின்னிட்டு வீட்டில் கதவை சாத்திக்கொண்டு அதிக நேரம் போன் பேசியதால் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல.

8. நான் காலை 8 மணிக்கு எழுந்து கணவருக்கு செய்யவேண்டிய கடமையை செய்யாததால் தான் பிரச்சனை ஏறப்பட்டது என்றால் சரியல்ல. நான் காலை 5 மணிக்கு எழுந்து தேவையான வேலைகளை செய்து கொடுத்தேன். எதிர்மனுதாரர் சொல்லி தான் பொம்மிடியில் உள்ள நாத்தனார் வீட்டிற்கு போனோம். திருமணத்திற்கு பின்னிட்டு ஒரு மாதம் மாமியார் வீட்டில் இருந்தோம். அதன் பிறகு 4 மாதம் பொம்மிடியில் இருந்தோம்.

9. நாங்கள் இருவரும் ஒன்றாக மொத்தமாக 6 மாதம் சேர்ந்து வாழ்ந்தோம். பொம்மிடி போன முதல் நாள் தான் என்னுடன் நன்றாக பேசினார்கள். அதற்கு பின்னிட்டு முகத்தை சுழிப்பது, பேசாமல் இருப்பது ஆகியவற்றை செய்தார்கள். ஏன் சாப்பிடவில்லை? எனது மாமியாரும், மாமனாரும் அடிக்கடி பொம்மிடிக்கு வருவார்கள். எனது மாமனார், மாமியார் வந்தால் சிறு சிறு பிரச்சனை செய்வார்கள். நான் தான் சரிவரபேசாமல் முகம் சுழித்து , யார் பேச்சையும் கேட்காமல், வீட்டு வேலைகள் செய்யாமல் பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னை கொடுமைப்படுத்திய நிலையில் பொம்மிடியிலோ அல்லது அருகில் உள்ள காவல் நிலையத்திலோ புகார் கொடுத்தேனா? என்றால் இல்லை.

10. எனது நாத்தனார் முடியை பிடித்து இழுத்து அடித்ததாக கூறியுள்ள நிலையில் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டேனா? என்றால் இல்லை. நானும், எதிர்மனுதாரரும் ஒரு வாரம் மட்டும் தான் பொம்மிடியில்இருந்தோம் என்றால் சரியல்ல. பிரமாணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளதுபோல் 4 மாதம் தங்கியிருக்கவில்லை என்றால் சரியல்ல. பொம்மிடியில் ரயில் தண்டவாளம் உள்ளது என்றால் தெரியாது. பொம்மிடியில் ரயில் நிலையம் உள்ளது என்றால் அது பற்றி தெரியாது. பொம்மிடி வழியாகத்தான் சென்னை செல்லும் ரயில் பாதை உள்ளது என்றால் சரிதான்.

11. பொம்மிடியில் உள்ள ரயில் தண்டவாளத்தில் விழுந்து தற்கொலை செய்துக்கொள்வதாக எதிர்மனுதாரரை மிரட்டினேன் என்றால் சரியல்ல. எனது

தலைமுடியை பிடித்து அடித்த தேதி நினைவில்லை. அந்த பிரச்சனைக்கு பின்னிட்டு தான் பொம்மிடியிலிருந்து பெரியவடகம்பட்டிக்கு வந்தேன். நான் பெரியவடகம்பட்டியிலிருந்து தான் எனது பெற்றோர் வீட்டிற்கு போனோன். தேதி நினைவில்லை. எனது கணவர் அவரது நண்பர் காரில் எனது பெற்றோர் வீட்டிற்கு கொண்டுபோய் விட்டதாக கூறியுள்ள நிலையில் அதற்கு முன்னரோ, பின்னரோ எனது பெற்றோர்கள் பைசல் பேசினார்களா? என்றால் இல்லை.

12. எனது பெற்றோரின் வீட்டிற்கு எதிர்மனுதாரர் தான் வற்புறுத்தி அழைத்து சென்றார். நானாக செல்லவில்லை. பெரியவடகம்பட்டிக்கு நாங்கள் வந்ததிற்க பின்னிட்டு அடுத்த நாள் காலை எனது பெற்றோர் வீட்டிற்கு கொண்டுபோய் விட்டார் என்றால் சரிதான். தேதி நினைவில்லை. அன்றைய தினம் புதன்கிழமை என்று நினைக்கிறேன். மே 2021 ஆகும். எனது கணவர் நான் போன் வைத்து பேசுவது சம்பந்தமாகவோ, வரதட்சணை கொடுக்காதது சம்பந்தமாகவோ எனது பெற்றோரிடம் பேசினாரா? என்றால் இல்லை. 10 நாட்கள் இருக்குமாறு எனது பெற்றோரிடம் சொல்லி விட்டுவிட்டு வந்தார்.

13. எதிர்மனுதாரர் என்னை எனது வீட்டில் விட்டு சென்றதற்கு பின்னிட்டு 10 நாள், ஒரு மாதம் என பார்த்தும் வரவில்லை. இதற்கிடையே 6 மாதம் ஆகிவிட்டது. எனது பெற்றோரின் ஊரில் எங்களது சொந்த பந்தங்கள் எல்லாம் வாழ்கிறார்கள் என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டு எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழபேச்சுவார்த்தை நடத்தினோமா? என்றால் ஆம். தலைதீபாவளிக்கு எனது பெரியப்பா, அம்மா, அப்பா என அனைவரும் சென்று அழைத்துனர். எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் எதிர்மனுதாரர் ஊரில் இல்லை என கூறி அனுப்பி வைத்துவிட்டனர். அதற்கு பின்னிட்டு பொம்மிடிக்கு சென்று அழைத்தார்கள். அவர்கள் தண்ணீர் ஏதும் கொடுக்காமல் வெளியிலேயே வைத்து அசிங்கப்படுத்தி அனுப்பிவிட்டார்கள். நான் எனது பெற்றோர்வீட்டிற்கு போனதற்கு பின்னிட்டு ஒரு மாதத்தில் தலை தீபாவளி வந்தது. அப்போது தான் சென்று அழைத்தனர்.

14. எனது பெற்றோர்கள் நடந்ததை சொன்னதற்கு பின்னிட்டு எனது கணவரிடம் செல்ல முயற்சி செய்தேனா? என்றால் எனது கணவர் வந்து அழைத்து செல்வார் என்ற நம்பிக்கையில் இருந்துவிட்டேன். அதற்கு பின்னிட்டு போலிசில் புகார் கொடுத்தேனா? என்றால் இல்லை. எதிர்மனுதாரர் விவாகரத்து கோரி வழக்கு தாக்கல்

செய்ததிருப்பதாக நீதிமன்றத்திலிருந்து அறிவிப்பு வந்தது. மேற்படி வழககில் நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழவேண்டும் என்று எதிர்வாதம் செய்துள்ளேன். மேற்படி விவாகரத்து வழக்கில் நான் எதிருரை தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்றத்திலிருந்து அறிவிப்பானது வந்த தேதி நினைவில்லை.

15. விவாகரத்து அறிவிப்பு வந்ததற்கு பின்னிட்டு மறுநாள் காலையிலேயே புகார் கொடுத்தேன். முதலில் எழுத்துமூலமான புகாரை தீவட்டிப்பட்டியில் காவல் நிலையத்தில் கொடுத்தேன். அதற்கு பின்னிட்டு என்னையும், எனது கணவரையும் அழைத்து பேசி விசாரித்து ஓமலூர் காவல் நிலையத்திற்குஅனுப்பி வைத்துவிட்டனர். தீவட்டிப்பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததற்கு பின்னிட்டு ஓமலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். ஓமலூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரை நான் தான் கைப்பட எழுதிக்கொடுத்தேன். நான் கொடுத்த புகார் வரதட்சணை சம்பந்தமாக இருந்ததால் வரதட்சணை கொடுமை எங்கு நடந்தது என்று விசாரித்து பொம்மிடி காவல் நிலையத்திற்கு மாற்றம் செய்துவிட்டார்கள். நான் வரதட்சணை கொடுமை செய்வதாகவும், மற்றொரு திருமணம் செய்துக்கொள்ளுமாறு வற்புறுத்துவதாகவும் புகார் கொடுத்தேன்.

16. பொம்மிடி காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேனா? என்றால் ஆம்.பொம்மிடி காவல் நிலையத்தில் குற்ற எண். 500/2022 ன் கீழ் வழக்கு பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். 09.04.2022 ம் தேதியில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். புகார் கொடுத்த மறுநாள் இருவரையும் அழைத்து விசாரணை செய்தனர். இரண்டு முறை விசாரித்ததற்கு பின்னிட்டு வழக்கு போட்டார்கள். எதிர்மனுதாரரை நீதிமன்ற காவலுக்கு அனுப்பினார்களா? என்பது தெரியாது.

17. நான் கொடுத்த வரதட்சணை சம்பந்தமான வழக்கானது பாப்பிரெட்டிப்பட்டி நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. அதற்கு பின்னிட்டு சமூகநலத்துறையில் எதிர்மனுதாரர் மீது புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி சமூகநலத்துறையில் கொடுத்த புகாரை 19.01.2022 ல் கொடுத்தேன் என்றால் தேதி நினைவில்லை. சமூகநலத்துறையில் இருவரையும் அழைத்து விசாரணை செய்தனர் என்றால் சரிதான். மேற்படி விசாரணைக்கு நான், எனது அப்பா, அம்மா போனோம். அருகில் இருந்த சொந்த பந்தகள் தானாகவே வந்தார்கள். எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர், மாமியார், நாத்தனார், நாத்தனாரின் கணவர் வந்திருந்தார்கள்.

18. மேற்படி விசாரணையில் எனது பெற்றோர், சொந்த பந்தங்கள் எதிர்மனுதாரரை தாக்கி காயம் ஏற்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. தள்ளுமுள்ளு ஏற்பட்டது. என்னை பற்றி தவறாக பேசியதால் சொந்த பந்தங்களுக்கு கோபம் வந்தது. எதிர்மனுதாரரை தாக்கியதால் சிகிச்சை எடுத்துக்கொள்ளும் அளவிற்கு காயம் ஏற்பட்டது என்றால் இரு தரப்பினரும் தான் மருத்துவமனையில் அட்மிட் ஆனோம். சமூகநல அலுவலரிடம் நானும், எதிர்மனுதாரரும் வாக்குமூலம் எழுதிக்கொடுத்தோம் என்றால் சரிதான்.

19. எனது கணவர் சமூக நலத்துறையில் கொடுத்த வாக்குமூலத்தில் எனது துணிமணி, எனது படிப்பு சம்பந்தப்பட்ட சான்றிதழ்கள் அனைத்தும் ஓமலூர் காவல் நிலையத்தில் வைத்து கொடுத்துவிட்டதாக வாக்குமூலம் அளித்துள்ளார் என்றால் சரிதான். நான் கணவருக்குண்டான பணிவடைகளை செய்யாமல் போன் பேசிக்கொண்டு பொறுப்பற்ற வகையில் இருந்ததால் தான் எதிர்மனுதாரர் மன உளைச்சலுக்கு உள்ளானார் என்றால் சரியல்ல. அவ்வாறு அவருடன் பேசாமல் இருந்து வந்து தற்கொலை செய்துக்கொள்ள போவதாக மிரட்டி வந்தேன் என்றால் சரியல்ல.

20. நான் தற்கொலை செய்துக்கொண்டால் எதிர்மனுதாரர் மீது வழக்கு வந்துவிடும் என்பதால் என்னை எனது பெற்றோர் வீட்டிலிருந்து அழைத்து செல்லவில்லை என்றால் சரியல்ல. எனது உணவு, உடை இருப்பிட செலவுகளுக்காக மாதம் ரூ.20000/- மும், பள்ளி செலவீனங்களாக ரூ.10000/- மும் இதர செலவீனங்களுக்காக ரூ.50000/- கோரியுள்ளது மிகவும் அதிகப்படியானது என்றால் சரியல்ல. நான் கல்லூரி சென்று படிக்காத நிலையில் கல்விக்கட்டணம் கோர உரிமையில்லை என்றால் சரியல்ல.

21. எனக்கு ஜீவனாம்சம் கொடுக்கும் அளவிற்கு எதிர்மனுதாரர் வருமான வசதி கொண்டிருக்கவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் வீட்டு லோன், வண்டி லோன் வாங்கிய வகையில் மாதந்திர தவணை செலுத்துவதற்கு எதிர்மனுதாரரின் மாத சம்பளம் போதுமானதாக உள்ள நிலையில் எனக்கு ஜீவனாம்சம் கொடுக்கும் நிலையில் எதிர்மனுதாரருக்கு வருமானம் இல்லை என்றால் சரியல்ல. நான் பிரமாணபத்திரிக்கையில் சொல்லியுள்ளதுபோல் எந்த கொடுமையோ குற்றமோ இழைக்கவில்லை என்றால் சரியல்ல. எனது பொறுப்பற்ற தன்மையினால் தான்

நாங்கள் பிரிந்து வாழ்கிறோம் என்றால் சரியல்ல.

22. எதிர்மனுதாரர் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டுஅவரை பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையில் எதிர்மனுதாரர் என்னை கொடுமைப்படுத்தியிருந்தால் எதிர்மனுதாரர் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே இந்த வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**